பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:28 | 11.12.2023 திங்கட்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு



தபால் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டுப் பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வுகாணத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

27,000 தபால் ஊழியர்கள் இந்த அடையாள பணிப்புறக்கணிப்புச் செய்வதால் தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டமானது நாளை (12) நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, 653 தபால் நிலையங்கள், 3,410 உபதபால் நிலையங்கள் மற்றும் அனைத்து நிர்வாக அலுவலகங்களும் முடங்கும் என்றும், சுமார் 27,000 தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சேவைகளைப் பெறுவதற்காக வட்டுக்கோட்டை தபால் நிலையத்துக்கு வருகை தந்த மக்கள், தபால் நிலையம் மூடப்பட்டுள்ளதைப் பார்த்து திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

# 5 மணிநேர மின் வெட்டால் 600கோடி ரூபா இழப்பு

இலங்கை முழுவதும் கடந்த 9 ஆம் திகதி சுமார் 5 மணித்தியாலங்கள் ஏற்பட்ட மின் தடையால் 600 கோடி ரூபா பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் மின் வெட்டைத் தடுப்பதற்காக வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டதே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பரிந்துரைகளை புறக்கணித்ததற்கு தற்போதைய மின்சார அமைச்சர் மற்றும் மின்சார அமைச்சின் செயலாளரே பொறுப்பு என அவர் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி இதே போன்று ஏற்பட்ட மின்வெட்டு காரணமாக சுமார் 1500கோடி ரூபா பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# கல்முனையில் நிலநடுக்கம்

அம்பாறை மாவட்டம் கல்முனைக்கு அருகில் இன்று அதிகாலை 5.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக இந்திய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று அதிகாலை 3:41 மணியளவில் கல்முனையில் இருந்து 51 கிலோமீற்றர் தொலைவில், கடலுக்கு அடியில் 366.2 கி.மீ ஆழத்தில் 5.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்திய கேளிக்கை

யாழ்ப்பாணத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (10) நடத்தப்பட்ட டிஜே களியாட்ட நிகழ்ச்சி மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எனினும், யாழ்ப்பாண மாநகரசபை இதற்கு அனுமதி வழங்கவில்லை என்று அறிவித்துள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில், "விளையாடு மங்காத்தா" எனும் பெயரில் நடைபெற்ற இந்த இரவு இசை விருந்துக்கு, ஒருவருக்கு உணவுடனான நுழைவுச்சீட்டு 3 ஆயிரம் ரூபாய்க்கும், சாதாரண நுழைவுச் சீட்டு 1500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான, கேளிக்கை நிகழ்வுகளுக்கு நுழைவுச்சீட்டு விற்பனை செய்வதாயின் மாநகர சபையின் அனுமதி பெறப்படவேண்டும் என்பதுடன், நுழைவுச் சீட்டின் பெறுமதியில் குறிப்பிட்ட வீதம் மாநகர சபைக்கு வரியாக செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும், எவ்வித அனுமதிகளும் இன்றி இந்த நிகழ்வு நடத்தப்பட்டுள்ளதுடன் வரி ஏய்ப்பு செய்யும் வகையிலும் இந்த நிகழ்வு அமைந்துள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

நேற்றையதினம் இடம்பெற்ற இந்த கேளிக்கையின் போது, மதுபான பாவனை காணப்பட்டதுடன், கைக்கலப்பும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# செல்வந்த சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் திட்டம்

செல்வந்த சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின் போது அமைச்சின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

2024 ஆம் ஆண்டில் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பது மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டை ஒரே நேரத்தில் தயாரிப்பது குறித்தும் குழு தனது கவனத்தை செலுத்தியது. குழுவில் உரையாற்றிய சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் அதிகாரிகள் ஹோம் ஸ்டே யோசனையை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டனர். இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் இலங்கையின் பொதுச் சமூகம் அவ்வாறான சுற்றுலாப் பயணிகளை வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும் என குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊழல்: பெரிய மீன்கள் இன்னும் சிக்கவில்லை

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் கீழ்மட்ட நபர்களை மட்டுமே குறிவைப்பதாக சுகாதார நிபுணர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன. ஊழலுக்குப் பின்னால் பெரிய அளவில் உள்ளது.

டெய்லி மிரருக்கு கருத்து தெரிவித்த சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், முன்னாள் அமைச்சர், சுகாதார செயலாளர் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் (என்.எம்.ஆர்.ஏ) அதிகாரிகள் போன்ற முக்கிய பிரமுகர்களின் தலையீட்டை இது போன்ற உயர்மட்ட வழக்கில் நிராகரிக்க முடியாது என்று வலியுறுத்தியுள்ளனர். எனவே, தற்போதைய கைதுகள் உயர்மட்ட நபர்களின் தலையீட்டை நிவர்த்தி செய்யத்தவறியதால், சி.ஐ.டி விசாரணைகளை விரைவுபடுத்தி இந்த ஊழலுக்கு காரணமான உண்மையான குற்றவாளிகளை கைது செய்யுமாறு சுகாதார சங்கங்கள் வலியுறுத்துகின்றன.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின் தலைவர் டொக்டர் ருக்ஷான் பெல்லானா, தற்போது நடைபெற்று வரும் விசாரணைகள் குறித்து தீவிர கவலைகளை வெளிப்படுத்தினார். முக்கிய குற்றவாளிகளை கைது செய்யாதது அதிகாரிகளின் பதிலின் செயல்திறன் குறித்து கேள்விகளை எழுப்புகிறது என்று கூறினார்.

மேலும் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் நிபுணத்துவ மன்றத்தின் தலைவர் டொக்டர் சமல் சஞ்சீவ, ஏற்கெனவே இந்த தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளைப் பெற்ற நோயாளிகளின் தலைவிதி தொடர்பில் தெளிவு இல்லாததை எடுத்துக்காட்டினார். இதே வேளை, சம்பவம் தொடர்பில் புதிய அமைச்சரின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால், விசாரணைகளை துரிதப்படுத்துமாறு சட்ட அமுலாக்க அதிகாரிகளிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் மூத்த சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊழல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக, மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் உட்பட பல அதிகாரிகள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பாடசாலைகளுக்கு சூரிய மின்கலம்

பாடசாலைகளில் சூரியமின்கலங்களை பொருத்தும் திட்டம் அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் விடுத்துள்ளார். அதிக மின்சார கட்டணத்தை எதிர்நோக்கும் பாடசாலைகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாதாந்தம் 20,000 ரூபாவுக்கு மேல் மின் கட்டணத்தை பெறும் பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தியை பெற்றுக் கொடுக்கும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# கையடக்கத் தொலைபேசி குறுஞ்செய்திகளுக்கு வரி

கையடக்கத்தொலைபேசி குறுஞ்செய்திகளுக்கு வரி அறவிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

கையடக்கத்தொலைபேசி குறுஞ்செய்திகளுக்கு மேலதிகமாக நிலையான தொலைபேசிகள் மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்திகளுக்கும் வரி அறவிடப்படும் எனவும் கூறியுள்ளார். அரச வருமானத்தை அதிகரிப்பதற்காகவே இந்த வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்திரேலியாவில் குடியேறுவோர் தொகை குறைப்பு

சர்வதேச மாணவர்கள் மற்றும் குறைந்த திறன் கொண்ட தொழிலாளர்களுக்கான விசா விதிகளை கடுமையாக்கப்போவதாக அவுஸ்திரேலியா திங்கட்கிழமை கூறியது, இது அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதன் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை பாதியாக குறைக்கும் என்று அரசாங்கம் அறிவித்தது.

புதிய கொள்கைகளின் கீழ், சர்வதேச மாணவர்கள் ஆங்கிலப் பரீட்சைகளில் அதிக மதிப்பீடுகளைப் பெற வேண்டும், மேலும் மாணவர்களின் இரண்டாவது விஸா விண்ணப்பத்தில் அவர்கள் தங்கியிருக்கும் காலம் நீடிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நெத்தலி கருவாடு இறக்குமதிக்கு 995 கோடி ரூபா



இலங்கைக் கடலில் அதிகளவு நெத்தலி மீன்கள் இருக்கும் போது நெத்தலி கருவாட்டினை இறக்குமதி செய்வதற்காக 995 கோடி ரூபா செலவிடப்படுவதாகவும், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் அழிவுக்குப் பிறகு கோடிக்கணக்கான சிறிய மீன்கள் அழிந்ததாகவும் கம்பஹா மாவட்ட சபை உறுப்பினர் அஜித் மான்னப்பெரும இன்று (11) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# மின் வெட்டுக்கான காரணம் கண்டறியப்பட்டது

**இலங்கையில் கடந்த 9 ஆம் திகதி மின்வெட்டால் நாடு இருளாகியது தலைப்புச் செய்தியாக இடம் பெற்றது. மின் வெட்டுக்காக காரணம் கண்டறியப் பட்டது. முன்னரும் இது போன்ற திடீர் மின் வெட்டால் நாடு பாதிக்கப்பட்டது. அதற்கான காரணம் அப்போதும் அறிக்கையாக வெளியானது. அதற்கான மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.**

**கொத்மலை முதல் பியகம வரையிலான மின் விநியோக பாதையில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் கடந்த சனிக்கிழமை (டிசம்பர் 09) நாடளாவிய ரீதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.**

**எவ்வாறாயினும், நேற்று இடம்பெற்ற நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபையினால் இரண்டு தனித்தனியான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என இன்றைய பாராளுமன்ற அமர்வின் போது உரையாற்றிய மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.**

**நேற்று மாலை நாடளாவிய ரீதியில் பாரிய மின் சாரத் தடைகள் பதிவாகியிருந்த நிலையில், கொத்மலையில் இருந்து பியகம வரையான மின் விநியோக பாதையில் ஏற்பட்ட கோளாறு இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டது.**

**இதற்கிடையில், மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்பட்டது அல்லது குறைந்த அழுத்தத்தில் விநியோகிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் சில மணி நேரங்களுக்குள் நீர் விநியோகத்தை மீட்டெடுக்க முடிந்ததாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.**

**இருந்தபோதிலும், நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தடைகளினால் ரயில் சேவைகள் தடையின்றி இடம்பெற்றதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.**

**நிலைமை காரணமாக பொல்கொல்ல, விக்டோரியா, ரன்தெனிகல மற்றும் ரன்டெம்பே நீர்த்தேக்கங்களின் பல வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

**2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதன்முதலில் இத்தகைய பெரிய மின்வெட்டுகள் பதிவாகியிருந்தன. ஆகஸ்ட் 2020 இல், கெரவலப்பிட்டியவில் ஒலிபரப்புக் கம்பிகளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக 6 மணித்தியாலங்கள் திடீர் மின்வெட்டு ஏற்பட்டது.**

**மேலும், 2021 டிசம்பரில், கொத்மலை மற்றும் பியகம ஒலிபரப்பு அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மின்சார விநியோகம் தடைப்பட்டது. இவ்வாறான மின்தடைகள் மீண்டும் ஏற்படாத வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சிபாரிசுகளை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

**திடீர் மின் வெட்டு ஏற்பட்டால் குறைவான நேரத்தில் மின்சாரம் வழங்குவதற்கான மாற்றுத் திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை. பிரதான பாதையில் பிழை ஏற்பட்டால் அது திருத்தப்படும்வரை காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.**

**மின் தடையால் பொதுமக்கள் பாதிப்படைகிறார்கள். ஆனால், சொகுசு விடுதிகள், உல்லாச ஹோட்டல்கள் மின் தடையால் பாதிக்கப்படுவதில்லை. அவை அதற்கான மாற்று வழியைக் கைவசம் வைத்திருக்கின்றனர். அரசாங்கத்திடம் மாற்றுத் திட்டம் எதுவும் இல்லை. பெரும் மின்தடைகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.**

# பத்திரிகையாளர் விருது விழா நாளை செவ்வாய்க்கிழமை




*24 ஆவது வருடாந்த சிறந்த பத்திரிகையாளர் விருதுகள் வழங்கும்விழா நாளை செவ்வாய்க் கிழமை (12) கல்கிசை ஹோட்டலில் நடைபெறவுள்ளது.*

*இலங்கை பத்திரிகை நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த தொழிற்சங்கங்கள், இலங்கை செய்தித்தாள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கையின் ஆசிரியர் சங்கத்தினால் விருது இரவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இதழியல் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரித்து அதில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருது வழங்குவதற்காக ஆண்டுதோறும் இந்த விழா நடத்தப்படுகிறது.*

*இந்த ஆண்டு, 36 ஊடகவியலாளர்கள் 'பேனா கிண்ணம்' விருதையும், மேலும் 16 பேர் நற்சான்றிதழ்களையும் HLD மஹிந்தபால, ஸ்டான்லி சமரசிங்க, சீதா ரஞ்சனி, எஸ்.தில்லைநாதன், ஏ.எல்.எம். நிலாம் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுவார்கள்.*

*இந்தியாவின் கேரளாவில் உள்ள மனோரமா குழுமத்தால் நடத்தப்படும் பத்திரிகை நிறுவனமான MASCOM இல் மேம்பட்ட பயிற்சிக்கான படிப்பிற்காக லக்ஷ்மன் கதிர்காமர் அறக்கட்டளை வழங்கும் லக்ஷ்மன் கதிர்காமர் நினைவு உதவித்தொகையை ஆண்டின் சிறந்த இளம் பத்திரிகையாளர் விருதைப் பெறுவார்.*

*இந்நிகழ்வின் பிரதான அனுசரணையாளர்களாக John Keells Holdings, Aitken Spence, Dialog Axiata Plc, Sri Lanka Insurance Corporation, Bank of Ceylon, People’s Bank மற்றும் Olu Water. மவுண்ட் லவீனியா ஹோட்டலாகும்.*

*13 உறுப்பினர்கள் (அச்சு ஊடகம்) மற்றும் நான்கு பேர் கொண்ட சுயேட்சை நீதிபதிகள் குழு (ஒன்லைன் செய்தித்தாள்கள்) கொண்ட சுயேட்சை நீதிபதிகள் குழுவினால் ஏழு செய்தித்தாள் வெளியீட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 354 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக சிறந்த பத்திரிகையாளர் விருதுகள் அழைப்பாளர் சுகுமார் ராக்வுட் தெரிவித்தார்.*

# ஏற்றுமதியாளர்கள் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்கின்றனர்

*இலங்கையின் நிதிச் சூழல் மெதுவாக முன்னேற்றமடைந்து வருகின்றபோதிலும், ஏற்றுமதியாளர்கள் தொடர்ந்து சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வட்டி விகிதங்கள் தளர்த்தப்பட்டு, இறக்குமதிகள் அனுமதிக்கப்பட்டாலும், ஏற்றுமதியாளர்கள் இன்னும் பல்வேறு சவால்களைச் சந்திக்கின்றனர் என தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் தலைவர் ஜயந்த கருணாரத்ன கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 30 ஆவது விருது வழங்கும் விழாவில் தெரிவித்தார்.*

*ஏற்றுமதியாளர்கள் இப்போது புதிய சிக்கல்களை எதிர்கொள்கின்றனர், அதாவது பொருத்தமற்ற நேரத்தில் விதிக்கப்படும் நியாயமற்ற வரிகள், அவர்களின் செயல்பாடுகளை பாதிக்கிறது.*

*2022- 2023 நிதியாண்டு முதல் நடைமுறைக்கு வரும் மெல்லிய மூலதனம் ஏற்றுமதியாளர்களுக்கு சவால்களை ஏற்படுத்துகிறது.*

*“பெரிய பரிவர்த்தனை ஏற்ற இறக்கங்களைக் கையாள்வதால், தற்போதுள்ள வணிகத்தின் அளவைத் தொடர நிறுவனங்கள் அதிக நிதியை கடன் வாங்க வேண்டும். மெல்லிய மூலதனமாக்கல் பயன்படுத்தப்பட்டாலும், ஆதாயங்கள் வரிக்கு உட்பட்டவை என்பதை பரிவர்த்தனைகள் உணர்கின்றன. இது ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.*

*மேலும், ஜனவரி 2024 முதல் நடைமுறைக்கு வரும் VMT மாற்றங்கள் தெளிவாக இல்லை, ஏனெனில் தேயிலை கொள்முதல் கடந்த காலத்தில் VMTக்கு உட்படுத்தப்படவில்லை மற்றும் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு VMT மற்றும் பெரும் கூடுதல் பணப்புழக்க பிரச்சினைகள் செலுத்த வேண்டியிருக்கும் என்றார்.*

# மிஹிந்தலை புனித பூமியின் பாதுகாப்பு அகற்றப்படவில்லை

மிஹிந்தலை புனித பூமியின் பாதுகாப்பு அகற்றப்படவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மிஹிந்தலை புனிதத் தலத்தின் பாதுகாப்பிற்கு ஸ்ரீலங்கா காவல்துறை பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், சுமார் முப்பது பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதன் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருப்பதாகத் தெரிவித்தார்.

மிஹிந்தலை விகாரைக்கு இராணுவம் அனுப்பப்பட்டிருப்பது பாதுகாப்புக்காக அல்ல, வேறு வேலைகளுக்காகவே எனத் தெரிவித்த பிரமித பண்டார தென்னகோன், மிஹிந்தலையில் இருந்து 252 பாதுகாப்புப் படையினர் அகற்றப்பட்டதாகத் தெவித்ததற்கு அமைச்சர் பதிலளித்தார்.

# உணவு விலை மீண்டும் உயர்வு



முட்டை, இறைச்சி, மீன், சீனி, கீரிச்சம்பா அரிசி போன்றவற்றின் விலைகள் அதிகரித்ததன் காரணமாக சிற்றுண்டி உள்ளிட்ட இதர உணவுகளின் விலையை உயர்த்த வேண்டும் என அகில இலங்கை உணவகம் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தலைவர் ஹர்ஷன ருக்ஷான் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனால்,சில கடைகளின் புதிய விலைகள் காட்டிப் படுத்தப்பட்டுள்ளன.

# மீண்டும் முட்டை விலை அதிகரிப்பு



பண்டிகை காலத்தை யொட்டி முட்டை உற்பத்தியாளர்கள் மற்றும் முட்டை வியாபாரிகள் மீண்டும் ஒரு முட்டையின் விலையை 60 ரூபாயாக உயர்த்தியுள்ளனர். நவம்பர் கடைசிவாரத்தில் வெள்ளை முட்டை ஒன்றின் விலை 40 ரூபாய் முதல் 42 ரூபாய் வரையிலும், கடந்த வாரம் வெள்ளை முட்டை ஒன்றின் விலை 44 ரூபாய் முதல் 46 ரூபாய்வரை அதிகரித்தது. நேற்று முன்தினம் முதல் முட்டை ஒன்றின் விலை 55 முதல் 60 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டது. முட்டை விலை உயர்வால் கேக், இனிப்பு வகைகளின் விலையையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும் என முட்டை வியாபாரிகள் கூறியதையடுத்து, முட்டை உற்பத்தியாளர்கள் முட்டை விலையை உயர்த்தியுள்ளனர்.

# வட் வரி திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றம்

வட் வரி திருத்தச் சட்ட மூலம் அதிக வாக்குகளால் இன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆதரவாக 92 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் பதிவாகியிருந்தன.

# எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக எட்டு மாவட்டங்களில் உள்ள 34 பிராந்திய செயலகங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை இன்று (11) இரவு 11 மணி வரை செல்லுபடியாகும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. களுத்துறை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

# ரணிலுடன் நான் ஒருபோதும் இணைய மாட்டேன்: சஜித்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சமரசம் செய்யவுள்ளதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகளை சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவ்வாறானதொரு நிகழ்வு ஒருபோதும் ஏற்படாது என தெரிவித்துள்ளார்.

“சில ஊடக நிறுவனங்கள் பொய்யான தகவல்களை பரப்புவதில் ஈடுபட்டுள்ளன. அரசாங்கத்திடம் இருந்து பண வெகுமதிகளை பெற்றுக்கொண்டு அவ்வாறு செய்கின்றனர்” என பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

# பாராளுமன்ற நேரலையை தாமதப்படுத்த நாமல் கோரிக்கை



“பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சேறு பூசும் அறிக்கைகளை வெளியிடுவதற்கும் முக்கியமற்ற விடயங்களைப் பேசுவதற்கும் தங்கள் நேரத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் நீதித்துறை மற்றும் நீதிபதிகள் குறித்து கருத்து தெரிவிக்க பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்துகின்றனர். இந்த நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாராளுமன்றத்தின் மீது நம்பிக்கை இழக்க நேரிடுகிறது எனவே, நேரடி ஒளிபரப்பை நிறுத்தி அரைமணி நேரம் தாமதமாக ஒளிபரப்பை வழங்குமாறு சபாநாயகர் மற்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டையில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். ராஜபக்ஷ, அண்மையில் தமக்கு வழங்கப்பட்ட நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பெரும்பாலும் கிரிக்கெட் பற்றியே பேசியதாக சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான விவாதங்களின் போது பாராளுமன்றம் என்ன முன்னேற்றம் கண்டுள்ளது என கேள்வி எழுப்பினார்.

# நான் இந்த நாட்டின் வருங்கால ஜனாதிபதி ஜங்க ரத்நாயக்க



இலங்கையின் எதிர்கால ஜனாதிபதி தானே என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜங்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில், வர்த்தமானி மூலம் தனது வேட்புமனுவை உத்தியோகபூர்வமாக அறிவித்ததாக தெரிவித்தார். “இலங்கையின் பொருளாதாரம் மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்கான வழிகள் என்னிடம் உள்ளன. கண்டிப்பாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன், என்றார்.

# மும்பை அணியில் தமிழ்மகள் கீர்த்தனா

ஆடவர்களுக்கு நடத்தப்பட்டு வரும் ஐ.பி.எல் தொடரைப் போல் WPL தொடர் கடந்த ஆண்டு முதல் மகளிருக்கும் நடத்தப்பட்டு வருகிறது. இத்தொடர் மூலம் இந்தியாவில் நிறைய இளம் வீரர்கள் உருவாகி வருகின்றனர். முதலில் தொடங்கப்பட்ட ஐ.பி.எல் போட்டிகளைப் போலவே தற்போது மகளிருக்கு நடத்தப்படும் "மகளிர் பிரிமியர் லீக்" போட்டிகளில் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று (டிசம்பர் 10) WPL 2024 தொடருக்கான மினி ஏலம் நடைபெற்றது. அதில், சர்வதேச போட்டிகளில் இன்னும் அறிமுகம் ஆகாத இந்திய வீராங்கனை காஷ்வி கௌதம் 2கோடிக்கு ஏலத்தில் வாங்கப்பட்டார்.

இதனிடையே, நேற்று அடிப்படை விலையான பத்து லட்ச ரூபாய்க்கு தமிழகத்தைச் சேர்ந்த 23 வயதான லெக் ஸ்பின் ஆல் ரவுண்டர் கீர்த்தனா பாலகிருஷ்ணனை மும்பை இந்தியன்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது. இதனிடையே யார் இவர் என்ற தேடல் இணையத்தில் அதிகரித்தது.

சென்னையில் ஆகஸ்ட் 10 ஆம் திகதி 2000 ஆம் ஆண்டு பிறந்தவர் கீர்த்தனா. தற்போது 23 வயது ஆகும், இவர் இதுவரை தமிழக அணிக்காக மூன்று போட்டிகளில் விளையாடி இருக்கிறார்.

அதில் மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றி இருக்கிறார். 2021-22 பிரேயர் கோப்பையில், 34 என்ற சராசரி மற்றும் 86 ஸ்ட்ரைக் ரேட்டில் 102 ரன்கள் எடுத்துள்ளார். பேட்டிங்கில் லோயர் மிடில் ஆர்டரில் விளையாடக் கூடியவர்.

இவரது தந்தை சென்னையில் கால் டாக்ஸி ஓட்டுநராக இருந்து வருகிறார். தமிழக கிரிக்கெட் வீரர் அபினவ் முகுந்தின் தந்தையான டி.எஸ்.முகுந்த் கிரிக்கெட் அக்கடமியில் கீர்த்தனா பாலகிருஷ்ணன் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்ஸி ட்ரைவரின் மகளாக பிறந்து மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம் பெற்றிருக்கும் இவரை பல்வேறு தரப்பினரும் வாழ்த்தி வருகின்றனர்.

இந்திய அணி வீரர் தினேஷ் கார்த்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் தன்னுடைய வாழ்த்தை பதிவு செய்துள்ளார். மேலும், சமூகத்தில் கீழ் மட்டத்தில் உள்ள பல கிரிக்கெட் வீரர்களிடம் இருந்து பணம் வசூலிக்காமல் கிரிக்கெட் பயிற்சி அளித்து வரும் டி.எஸ். முகுந்த் கிரிக்கெட் அக்கடமியையும் பாராட்டியுள்ளார்.



# இரண்டு வருடங்களின் பின்னர் ரஸ்ஸல்

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து ரி20 போட்டிகளில் மேற்கு இந்தியா விளையாட உள்ளது. முதல்மூன்று போட்டிகளில் இங்கிலாந்தை எதிர்கொள்ளும் 15 பேர் கொண்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரி20 உலகக்கிண்ணப் போட்டிக்குப் பின்னர் அணியில் இடம்பெறாத மேற்கிந்திய ஆல்-ரவுண்டர் ஆண்ட்ரே ரசல், மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார். ஜூன் மாதம் அமெரிக்காவுடன் இணைந்து உலகக் கோப்பையை நடத்துவதற்கு முன்னதாக, 2023 இல் மேற்கிந்தியத் தீவுகளின் கடைசி ரி20 தொடர் இதுவாகும். ரி 20 அணியில் முதல்முறையாக சீமர் மேத்யூ ஃபோர்டை அணியில் இடம்பிடித்துள்ளார். 21 வயதான பார்பேடியன் சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடருக்கான தனது முதல் ஒரு நாள் போட்டியில் விளையாடினார். ஆல்-ரவுண்டர் ஷெர்பேன் ரூதர்ஃபோர்ட் ஜனவரி 2020 க்குப் பிறகு அணிக்குத் திரும்புகிறார், அதே நேரத்தில் காயம்காரணமாக ஆகஸ்ட் மாதம் இந்திய தொடரைத் தவறவிட்ட குடாகேஷ் மோட்டியும் சேர்க்கப்பட்டுள்ளார்.




# கலப்பு அணி டேபிள் டென்னிஸில் சம்பியனாகியது சீனா

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் சம்மேளனத்தின் (ஐ.டி.டி.எஃப்) கலப்பு அணி உலகக்கோப்பையின் தென் கொரியாவை 8-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சீனா வெற்றி பெற்றது. இறுதி நாளுக்கு முன்னர் இரு அணிகளும் தோல்வியடையாமல் இருந்தன. ஆனால், தங்கப் பதக்கப் போட்டி ஒரு பக்கச்சார்பான விவகாரமாக மாறியது. கலப்பு இரட்டையர் பிரிவில் முதலிடத்தில் உள்ள வாங்சுகின் மற்றும் சன்யிங்ஷா ஜோடி 11-5, 11-5, 11-8 என்ற செட் கணக்கில் ஷின் யூ-பின் மற்றும் அன் ஜே-ஹியூன் ஜோடியை வீழ்த்தி வெற்றி பெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் வாங்மன் யு 11-2, 11-5, 11-7 என்ற செட் கணக்கில் தென்கொரியாவின் கிம் நா-யோங்கை தோற்கடித்து மேலும்மூன்று புள்ளிகளைக் குவித்தார். ஆடவர் ஒற்றையர் பிரிவில் லீ சாங்-சுவுக்கு எதிராக 11-7, 10-12, 11-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சீனாவின் வெற்றியை உறுதி செய்தார் உலகின் நம்பர் 1 ஃபேன் ஜென் டாங். முன்னதாக, ஜப்பான் ஜேர்மனியை 8-4 என்ற கணக்கில் வென்று மூன்றாவது இடத்தையும் பிரான்ஸ் 8-4 என ஸ்லோவாக்கியாவையும் சீன தைபே 8-6 என்ற கணக்கில் சுவீடனையும் வென்றன.



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 11.12.2023 அன்று வெளியிடப்பட்டது.